# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 28/2022 நாள்.16.02.2026

PW1- திருமதி. நீலாவாதி க/பெ. திரு. முருகையன்பிள்ளை

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

எனக்கு பிறந்தது மூன்று மகன்கள் என்றால் ஆமாம். மூத்தவர் சேகர், 2வது திருநாவுகரசு, 3வது மணிகண்டன் என்றால் ஆமாம். சேகர்தான் 1ஆம் பிரதிவாதியின் கணவர் என்றால் ஆமாம். அவர் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். 2வது மகன் திருநாவுகரசு வெளிநாட்டில் ஓட்டுநராக பணியாற்றி 2018 இறந்துவிட்டார் என்றால் ஆமாம். 3வது மகன் மணிகண்டன் திருமணம் ஆகவில்லை என்றும் பெட்ரோல் பங்கில் வேலைபார்க்கிறார் என்றும் சொன்னால் ஆமாம். 1ஆம் பிரதிவாதியின் பெற்றோர்கள் வேதாரண்யத்தில் வசிக்கிறார் என்றால் ஆமாம். எனக்கு சொந்தஊர் வேதாரண்யம் தோப்புத்துறை என்றால் ஆமாம். 1ஆம் பிரதிவாதியின் அப்பா மளிகைகடை நடத்தினார் என்றால் ஆமாம். 1ஆம் பிரதிவாதி தகப்பனாருக்கு அவரை போல் அவரையும் சேர்த்து மூன்று பெண்கள், இரண்டு ஆண்கள் என்றால் ஆமாம். மூத்தவர் கனகராஜ் துபாயில் நிரந்தரமாக உள்ளார் என்றால் ஆமாம். சீனிவாசனும் துபாயில் உள்ளார் என்றால் ஆமாம். சேகர் திருமணமாகுவதற்கு முன்பாகவே ஒட்டுனராக வெளிநாட்டில் வீட்டில் வேலை பார்த்தார் என்றால் ஆமாம். தாவா சொத்து திருமணத்திற்கு முன்பாக வாங்கபட்டதல்ல என்றால் ஆமாம். 2001 இல் திருமணம் என்றால் ஆமாம். 1ஆம் பிரதிவாதி குடும்பத்தில் சீர்வரிசை எல்லாம் செய்தார் என்றால் ஆமாம். 2001 இல் திருமணத்திற்கு பிறகுதான் 2003இல் தாவா மனை சொத்துக்கள் வாங்கினார் என்றால் ஆமாம். வாங்கும்போது காலி மனை என்றால் ஆமாம். ஒட்டுனராக வேலை பார்த்தபோது மாதம் எனக்கு எவ்வளவு கொடுத்தார் என்றால் திருமணத்திற்கு முன்பு 3000 அனுப்புவார். திருமணத்திற்கு பிறகு 1ஆம் பிரதிவாதிக்கு எவ்வளவு அனுப்புவார் என்றால் 10000த்திற்கு குறையாமல் அனுப்புவார். எனக்கு வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பியது வங்கி கணக்கு என்றால் ஆமாம். அதேபோல் 1ஆம் பிரதிவாதிக்கும் வங்கி கணக்கு அனுப்புவார் என்றால் தெரியாது. எனக்கு எப்படி அனுப்புவார் என்றால் திருமணத்திற்கு பிறகு 1ஆம் பிரதிவாதி மாதம் 1000ரூபாய் அனுப்புவார். 1ஆம் பிரதிவாதி வெளிநாட்டிற்கு போய் அவர் கணவருடன் 2004இல் வேலை பார்த்தார் என்றால் ஆமாம். நான் குடியிருக்கும் வீட்டின் கீழ்தளம் அதன் பிறகு வெளிநாட்டிலிருந்து வந்து கட்டினார் என்றால் ஆமாம். பிறகுதான் 4வருடம் கழித்து குடியிருக்கும் வீட்டில் மாடி கட்டினார்கள் என்றால் ஆமாம். நான் இந்த காலகட்டத்தில் வேதாரண்யம் தோப்புத்துறையில்

வசித்தேன் என்றால் ஆமாம் 2019 இல் வந்துவிட்டேன்.மற்றொரு மனையில் 2014 முதல் 3ஆண்டுகள் வாடகைக்கு விட வீடு கட்டினார்கள் என்றால் ஆமாம். 1ஆம் பிரதிவாதியின் சகோதரர் கனகராஜ், சீனிவாசன் வெளிநாட்டிலிருந்து 1ஆம் பிரதிவாதிக்கும், அவர் கணவருக்கும் பணம் அனுப்புவார்கள் என்றால் அனுப்பமாட்டார்கள். அந்த காலகட்டத்தில் 1ஆம் பிரதிவாதியின் கணவர் கணக்கிற்கு கனகராஜ் ரூ பாய் 10 லட்சம் வங்கி பரிவர்த்தனை மூலம் அனுப்பியுள்ளார் என்றால் இல்லை. 2018 இல் இந்தியாவிற்கு வந்த சேகர் திரும்ப வெளிநாட்டிற்கு போகவில்லை என்றால் ஆமாம். என் மகன் திருநாவுக்கரசு வெளிநாட்டில் வேலை பார்த்த வகையில் அய்யம்பேட்டையிலோ, தோப்புத்துறையிலோ இடம் வாங்கவில்லை என்றால் ஆமாம் அண்ணனிடம் பணம் கொடுத்தார். திருநாவுக்கரசுவிற்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 2003. அவருக்கு திருமணமான பிறகு அவர் சம்பளத்தை யாருக்கு அனுப்புவார் என்றால் அவர் மனைவிக்கு அனுப்புவார். வெளிநாட்டில் கொடுத்த பணத்தை வைத்துதான் அவரின் மனைவி திருச்சியில் இடம் வாங்கி வீடு கட்டியுள்ளார் என்றால் தவறு, இடம் வாங்கவில்லை. ஹெர்பல் பிஸ்னஸ் 1ஆம் பிரதிவாதி முகவர் வாங்கி வீட்டில் வைத்து நடத்தினார் என்றால் ஆமாம். அதன்பிறகு ஆசிரியர் வேலைக்கு போய் வருகிறார் என்றால் போவதாக சொல்கிறார்கள் நான் பார்க்கவில்லை. பரிமளாவிற்கும், சேகருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். பரிமளா அவர் மீது வழக்கு போட்டார் என்றால் ஆமாம். 2018 இல் காலனி வீடு வாடகையை சேகர்தான் வாங்கிவந்தார் என்றால் இல்லை. சேகர் அவர் இருக்கும் காலத்தில் ஒரு வீட்டை ஒத்திக்கு விட்டார் தற்போது 1ஆம் பிரதிவாதி இரண்டு வீட்டை ஒத்திக்குவிட்டுள்ளார். சேகர் இறப்பதற்கு முன்பாக 1ஆம் பிரதிவாதிக்கும் அவருக்கும் சமாதானம் ஏற்பட்டு அந்த விவாகரத்து வழக்க தள்ளுபடியாகிவிட்டது என்றால் ஆமாம். 2020இல் கொரானாவால் பாதிக்கபட்டு சேகர் மருத்துவமனையில் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். அவர் இறந்தபிறகுதான் நான் அந்த வீட்டிற்கு குடிவந்தேன் என்றால் இல்லை 2020இல் என் மகன்தான் கொண்டுவந்து வைத்தார். நான் சொல்லியுள்ள விபரங்கள் என் மகன் சொல்லி தெரியுமா என்றால் ஆமாம். என் உடன் பிறந்தவர்தான் கோவிந்தராஜ் என்றால் ஆமாம். கோவிந்தராஜ் இந்நீதிமன்றத்தில் சேகர் உயிருடன் இருக்கும்போது 10லட்சம் கடன் வாங்கியதாக சொல்லி எண் 150/2021 வழக்கு போட்டுள்ளார் என்றால் ஆமாம். அந்த வழக்கில் என்னையும் சேர்த்து தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். அந்த கடனை இந்த பாக வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. மயிலாடுதுறையில் பரிமளா குடும்பத்தில் அவருக்கு மனை வாங்கி வைத்தார்கள்என்றால் இல்லை. பரிமளா பெயரில் உள்ள பிளாட்டை 2008இல் விற்றார்கள் என்றால் என் பையன்

பணம் அனுப்பி அவர் பெயரில் வாங்கியது. வழக்கு சொத்து சேகர் தன் மனைவிக்கு அதிகாரம் கொடுத்ததன் அடிப்படையில் 1ஆம் பிரதிவாதி விலைக்கு வாங்கினார் என்றால்தெரியாது. 2019இல் பணம் வாங்கியதாக சொல்லி அ.வ எண் 150/21 வழக்கு தாக்கல் செய்யபட்டுள்ளது என்றால் ஆமாம். நானும் அவ்வழக்கின் வாதியும் ஒன்றாக வந்தோம் என்றால் ஆமாம். என்னுடைய 2, 3வது மகன்களுக்கு சொத்து எதுவும் இல்லை என்றால் ஆமாம். 1ஆம் பிரதிவாதியின் பெற்றோருக்கு ஊரில் வீடு, நிலங்கள் உள்ளது என்றால் ஆமாம். நான் என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் தவறு என்றும், சேகர் திருமணத்திற்கு பிறகு 4000மும், 2015க்கு பிறகு மாதம் 10000மும் குடும்பத்திற்கு அனுப்பினார் என்றால் தெரியாது. 1ஆம் பிரதிவாதியின் பெற்றோர், சகோதரர் கொடுத்த பணத்தை கொண்டு 1ஆம் பிரதிவாதி அவருடைய நகைகளை அடமானம் வைத்தும் விற்றும், தாவா சொத்துக்கள் கிரையம் வாங்கபட்டு வீடுகள் கட்டினார் என்றால் சரியல்ல. சேகர் இறந்தபிறகுதான் எனக்கும் 1ஆம் பிரதிவாதிக்கும் விரோதம் ஏற்பட்டதன் காரணமாக எனது அண்ணன் மூலம் கடன் வாங்கியதாக ஆவணம் தயார் செய்து அவ எண் 150/21 தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை அலக்கழிக்க இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.16 14:39:10 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**